IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE,
GUDIYATHAM, VELLORE DISTRICT.

STC.NO.716/2025

DEPOSITION OF WITNESS P.W.1

| | | |
|---|---|---|
| NAME | : | KUPPU |
| HUSBAND NAME | : | CHANDIRASEKAR |
| VILLAGE | : | PARADHARAMI |
| OCCUPATION | : | COOLIE |
| AGE | : | 58 |

Solemnly affirmed in accordance with the provisions of Section 3 and 4 of the Indian Oaths Act 1969, r/w rule 35 and 36 of Criminal Rules of Practice 2019 of the $2^{th}$ day of july 2026.

**சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.**

எதிரிகள் ஆஜர் இல்லை. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் மேற்படி முகவரியில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன்.ஆஜரில் இல்லாத எதிரிகள் விஜயன் மற்றும் நவீன் ஆகியோரை தெரியும். ஒரே தெருவில் தான் வசித்து வருகிறோம். வருடம் ஞாபகம் இல்லை. 2 வருடங்களுக்கு முன்பு ஜனவரி மாதம், 7ம் தேதி அன்று காலை 09.00 மணியளவில் விஜயன், நவீன் என்பவர்கள் எனது வீட்டிற்கு வந்து எனது மகன் முருகன் என்பவரை அவர்களது வீட்டில் லைட் எரியவில்லை என்று டிரான்ஸ்பார்மரில் ஏறி சரிசெய்ய சொன்னபோது எனது மகன் முருகன் அவர்களது வீட்டில் இருந்த UPS–ல் இருந்து மின்சாரம் return ஆகி தாக்கியதில் கீழே விழுந்துவிட்டார். மேற்படி விவரத்தை எனது பெரிய மகனுக்கு நவீன் என்பவர் போன் செய்து சொன்னார். பின்னர் 2 நாட்கள் கழித்து காவல் நிலையத்திற்கு சென்று புகார் அளித்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

1. எனக்கு எழுதப்படிக்க தெரியாது. நான் 09.01.2024ம் தேதியன்று புகார் கொடுத்தேன். நான் புகார் கொடுத்த அன்றே வழக்கு பதிவு செய்தார்கள். வழக்கு பதிவு செய்ததாக எனக்கு நகல் கொடுத்து கையொப்பம் பெற்றார்களா என்றால் இல்லை. தற்போது வரை போலிஸார் என்னிடம் கையொப்பம் பெறவில்லை. பரதராமி இ.பி.ஸ்டேஸனில் இருந்து காவல் நிலையத்தில் என் மகன் மீது புகார் அளித்த விவரம் எனக்கு தெரியும்.

2. தற்போது வரை எனது மகன் மீது புகார் அளித்துள்ளதாக எதுவும் விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான். எனது மகன் பரதராமி ஆரம்ப சுகாதார நிலையத்திலிருந்து மியாட் மருத்துவமனையில் சிகிச்சைக்காக இருந்த நாள் வரை

நான் தான் அருகே இருந்து பார்த்துக் கொண்டேன் என்றால் சரிதான். விபத்து ஏற்பட்ட நாளிலிருந்து எனது மகன் மற்றவர்களைப் போல சாதாரணமாக இயற்கை உபாதைகள் கழிக்க முடியாது என்றாலும், நான் பார்த்துக் கொள்கிறேன் என்றாலும் சரிதான்.

3. எனது மகன் மேற்படி நிலையிலிருந்ததால் நான் ஒரு நிமிடம் கூட அவரை விட்டு பிரியாமல் வைத்தியம் பாா்த்து வந்தேன் என்றால் சரிதான். புகார் மனுவில் என்ன எழுதியிருந்தது என்ற விவரம் எனக்கு தெரியாது. எனது ஊரைச் சேர்ந்த ஒருவர் புகார் தயார் செய்து கொடுத்தார். எனது தம்பி ரவி என்பவர் புகாரை தயார் செய்தார்.

4. அவர் தயார் செய்த புகாரை நான் காவல் நிலையத்தில் கொடுத்தேன். எனது மகனை சென்னை மருத்துவமனையில் சேர்த்த பின்னர் ஊருக்கு வந்து புகார் அளிக்க எனக்கு நேரமில்லை என்றால் சரிதான். புகாரை நான் கொடுக்கவில்லை என்றாலும் புகாருக்கும் எனக்கும் சம்மந்தமில்லை என்றாலும் சரியல்ல. அதனை நான் தான் கொடுத்தேன். எனது மகன் பரதராமி இ.பி. அலுவலகத்தில் ஒப்பந்த பணியாளராக பணியாற்றி வந்தார் என்றால் சரிதான்.

5. எனது மகனுக்கு விபத்து ஏற்பட்டதாக 2ம் எதிரி நவீன் தான் எனக்கு தகவல் சொன்னார். எதிரிகள் வந்து சொல்லாமல் இருந்திருந்தால் எனது மகனுக்கு அடிப்பட்ட விவரம் தெரிந்திருக்காது என்றால் சரிதான்.

6. விபத்தில் பாதிக்கப்பட்ட எனது மகனுக்கு உதவி செய்தவர்கள் மீது நான் பொய்யாக புகார் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது மகனுக்கு ஏற்பட்ட விபத்திற்கும் எதிரிகளுக்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. எதிரிகள் பணக்காரர்கள் என்றால் அவர்களிடம் நஷ்ட இடு பெறுவதற்காக பொய்யாக புகார் அளித்தேன் என்றால் சரியல்ல.

Sd/–R.Saranya.,

Judicial Magistrate,

Gudiyatham.

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE,
GUDIYATHAM, VELLORE DISTRICT.

STC.NO.716/2025

DEPOSITION OF WITNESS P.W.2

| | | |
|---|---|---|
| NAME | : | MURUGAN |
| FATHER NAME | : | CHANDIRASEKAR |
| VILLAGE | : | PARADHARAMI |
| OCCUPATION | : | TNEB(CONTRACT BASIS) |
| AGE | : | 30 |

Solemnly affirmed in accordance with the provisions of Section 3 and 4 of the Indian Oaths Act 1969, r/w rule 35 and 36 of Criminal Rules of Practice 2019 of the 2th day of july 2026.

**சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.**

எதிரிகள் ஆஜர் இல்லை. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் மேற்படி முகவரியில் குடியிருந்து வருகிறேன். அ.சா.1 எனது அம்மா ஆவார். கடந்த 07.01.2024 அன்று காலை 09.00 மணியளவில் நவீன் என்பவர் எனக்க போன் செய்து அவரது வீட்டில் லைட் எரியவில்லை என்று சரிபார்க்க வர சொன்னார். நான் ஞாயிற்று கிழமை என்பதால் வரமுடியாது என்று சொல்லிவிட்டேன். பின்னர் நவின் மற்றும் அவரது அப்பா ஆகியோர் எனது வீட்டிற்கு இருசக்கர வாகனத்தில் வந்து என்னை அழைத்து சென்று டிரான்ஸ்பார்மரில் ஏறி சரி செய்யசொன்னார்கள். நான் டிரான்ஸ்பார்மரில் ஏறி சரிபார்த்துகொண்டிருந்தபோது அவர்களது வீட்டில் இருந்த UPS–ல் இருந்து கரண்ட் return ஆகிய என் மீது பாய்ந்ததில் நான் கீழே விழுந்துவிட்டேன். நான் 2 phase ஆப் செய்துவிட்டுதான் டிரான்ஸ்பார்மரில் ஏறினேன். அவர்களது வீட்டில் UPSஇருந்த விவரத்தை என்னிடம் சொல்லவில்லை. நான் கீழே விழுந்தபோது மயக்கம் அடைந்தவிட்டேன். பின்னர் 3 நாட்கள் கழித்து சென்னை மியாட் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தேன். எனக்கு spinal cord–ல் அடிப்பட்டது. வழக்கு சம்பந்தமாக என்னை போலிசார் விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1. நான் தமிழ்நாடு மின்சார வாரியத்தில் ஒப்பந்த பணியாளராக 2021–ல் சேர்ந்தேன். விபத்து நடந்த சமயத்திலும் ஒப்பந்த பணியாளராக பணியாற்றி வந்தேன். நான் மின்சார வாரியத்தில் fuse போடுவது, புதிய மின் eriction இணைப்பு இணைப்பது போன்ற வேலைகள் ஒப்பந்த பணியாளராக செய்து வந்தேன்.

2. வேலையில் சேர்வதற்கு முன்பு எனக்கு மின்துறையில் பயிற்சி, நிபந்தனைகள் மற்றும் கடமைகள் சொல்லி கொடுத்தார்கள் என்றால் சரிதான். எனக்கு சொல்லிகொடுத்ததன் அடிப்படையில்தான் பணி செய்து வந்தேன். நான் பரதராமி substation(துணை மின் நிலையத்தில்) ஒப்பந்த பணியாளர் என்றால் சரிதான். பரதராமியில் மொத்தம் எத்தனை மின் இணைப்புகள் உள்ளது என்ற விவரம் எனக்கு

தெரியாது.

3. மின் நுகர்வோர் வீட்டில் மின்சாரம் தடைப்பட்டால் அல்லது துண்டிப்பு ஏற்பட்டால் மின்சார துறைக்குதான் தகவல் சொல்லவேண்டும் என்றால் சரிதான். மின் நுகர்வோர் வீட்டில் மின் துண்டிப்பு ஏற்பட்டால் முதலில் substation–க்கு தான் தகவல் தெரிவிப்பார்கள் என்றாலும், substation–ல் இருந்துதான் எங்களுக்கு தகவல் சொல்லுவார்கள் என்றால் சரிதான்.

4. பரதராமி துணை மின் நிலைய பொறுப்பு அலுவலர்தான் யார் என்ன வேலை செய்ய வேண்டும் என்று நிர்ணயம் செய்வார் என்றால் சரிதான். மேற்படி பொறுப்பு அலுவலர் JE ஆவார். விபத்து நடந்த சமயத்தில் JE பிரபு என்பவர் பொறுப்பில் இருந்தார். அவருடைய அனுமதி இல்லாமல் எந்த வேலையும் பரதாராமி துணை மின் நிலைய வரம்பிற்குள் செய்யக்கூடாது என்றால் சரிதான்.

5. பரதராமி துணை மின் நிலைய பொறுப்பு அலுவலரின் அனுமதி பெறாமல் டிரான்ஸ்பார்மரில் ஏறியபோதுதான் எனக்கு விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். எனக்கு விபத்து எற்பட்ட மறுநாள் பரதராமி துணை மின் நிலையத்தில் இருந்து என் மீது புகார் அளித்தார்கள் என்றால் சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படம் CSR நகல் மேற்படி புகாரின்பேரில் பதிவு செய்யபட்டது என்றால் சரிதான். மேற்படி CSR நகல் ExD–1ஆக குறியீடு செய்யப்படுகிறது.

6. நான் தமிழ்நாடு மின் துறையில் ஒப்பந்த பணியாளராக பணியாளராக பணியாற்றி வருவதால் எனக்க மின்சார துறையின் நிபந்தனைகள் மற்றும் கடமைகள் தெரியும் என்றாலும், யார் அழைத்து இருந்தாலும் நான் முறையாக அனுமதி பெறாமல் டிரான்ஸ்பார்மரில் ஏறி சரிசெய்ய முற்பட்டதால் எனக்கு ஏற்பட்ட விபத்திற்கு நான்தான் காரணம் என்றாலும் சரியல்ல.

9. EB மெயின் லைனில் இருந்துதான் டிரான்ஸ்பார்மருக்கு மின்சாரம் செல்லும் என்றாலும், அங்கிருந்து EB pole மின்சாரம் செல்லும் என்றாலும் சரிதான். எனக்கு விபத்து நடந்த பகுதியில் எத்தனை வீடுகள் உள்ளது என்றாலும், எத்தனை வீடுகளில் மின் இணைப்பு உள்ளது என்றாலும் எனக்கு தெரியாது.

10. எனது புகாரின் அடிப்படையில் UPS–ல் முழு மின் சேமிப்பு இருந்து return supply ஆன காரணத்தினால் எனக்கு விபத்து ஏற்பட்டதாக சொல்கிறேன் என்றால் சரிதான். புகாரில் மேற்சொன்னவாறு தான் சொல்லியுள்ளனே் என்றால் சரிதான். எனது போலிஸ் விசாரணையிலும் மேற்படி விவரத்தைதான் சொன்னனே் என்றால் சரியல்ல. போலிசார் விசாரணை செய்யவில்லை. வழக்க குறித்து இதுவரை போலிஸ் என்னை விசாரணை செய்யவில்லை.

11. எதிரிகளுக்கும், எனக்கும், எனக்கு ஏற்பட்ட விபத்திற்கும், நேரடியாகவும், மறைமுகமாகவும் எந்த வித தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல. எதிரிகளின் வீட்டில் UPS உள்ள விவரம் எனக்கு தெரியும் என்றால் தெரியாது. எதிரிகளின் வீட்டில் UPS வசதி உள்ளதாலும், பகல்நேரம் என்பதாலும் எதிரிகள் என்னை அழைக்கவில்லை என்றால் சரியல்ல.

12. நான் எதிரிகளின் மீது workmen compensation act–ன் கீழ் நஷ்ட ஈடு கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி வழக்கில் எவ்வளவு நஷ்ட ஈடு கேட்டு உள்ளேன் என்றால் தெரியாது. எதிரிகளின் வீட்டிற்கும், எனதுவீட்டிற்கும் 500

மீட்டர் தூரம் இருக்கும். எதிரிகளின் வீட்டை சுற்றி சுமார் 40 வீடுகள் இருக்கும். மேற்படி 40 வீடுகளுக்கும் எனக்கு விபத்து ஏற்பட்ட டிரான்ஸ்பார்மரில் இருந்து தான் மின்சாரம் சப்ளை ஆகிறது என்றால் சரிதான்.

13. மேற்படி 40 வீடுகளில் எத்தனை வீட்டில் UPS. Generator வசதி உள்ளது என்று எனக்கு தெரியாது. எனது வீட்டில் மின் துண்டிப்பு ஏற்பட்டாலும் கூடி மேற்படி டிரான்பார்மரில்தான் சரிபார்க்க வேண்டும் என்றால் சரிதான். எனக்கு மேற்படி வகையான மின்துண்டிப்பு ஏற்படும்போது டிரான்ஸ்பார்மரில் பழுதுபார்த்து சரிசெய்ய நல்ல அனுபவம் உள்ளது என்றால் சரிதான்.

14. 1வது எதிரி விஜயன் கூட்டுறவு வங்கியில் மேலாளராக உள்ளார். 2வது எதிரி நவீன்குமார் பைனான்ஸ் நடத்தி வருகிறார். எனக்கு எதிரிகள் உறவினர்கள் இல்லை. எதிரிகளை தவிர எனது வீட்டின் அக்கம் பக்கம் உள்ளவர்கள் எனது உறவினர்கள் என்றால் சரியல்ல. புகாரில் உள்ள விவரங்கள் பொய்யானது என்றாலும், எதிரிகள் பொருளாதார ரீதியாக வலுவாக உள்ளதால் அவர்களிடம் இருந்து பணம் பறிக்க பொய்யாக புகார் அளித்துள்ளேன் என்றாலும் சரியல்ல.

15. எனது வீட்டில் மின்துண்டிப்பு ஏற்பட்டதால்தான் நான் டிரான்பார்மரில் ஏறி சரிசெய்தேன் என்றாலும், வழக்கிற்காக எதிரிகள் வீட்டில் மின்துண்டிப்பு ஏற்பட்டதால்தான் நான் டிரான்பார்மரில் ஏறி சரிசெய்தேன் என்றாலும் சரியல்ல. எனக்கு திருமணம் ஆகவில்லை என்றாலும், எனது அம்மாதான் நான் மருத்துவமனையில் இருந்த காலத்தில் என்னை பார்த்துகொண்டார்கள் என்றாலும் சரிதான்.

16. நான் பரதராமி ஆரம்ப சுகாதார நிலையத்தில் சிகிச்சைக்காக இருந்த காலத்திலிருந்து மியாட் மருத்துவமனையில் இருந்த காலகட்டம் வரை எனது அம்மாவிற்கு ஒரு நாள் கூட ஓய்வே இல்லை என்றால் சரிதான். போலிசார் என்னை மருத்துவமனையில் விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான். எனது அம்மாவையும் மருத்துவமனையில் விசாரணை செய்யவில்லை என்றால் எனக்குத் தெரியாது. இவ்வழக்கின் புகாரர்தரரான எனது அம்மா அளித்துள்ள புகாரில் உள்ள சங்கதிகள் உண்மையல்ல என்றாலும் எதிரிகளை விடுதலை செய்யவேண்டும் என்றாலும் சரியல்ல. .